**லங்கா பில்டிங் மற்றீரியல் கோப்பரேஷன் லிமிட்டட் - 2016**

---

பில்டிங் மற்றீரியல் கோப்பரேஷன் லிமிட்டட்டின் (''கம்பனி'') 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இவ் அறிக்கை வழங்கப்படுகின்றது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

**1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

(அ) கணனி முறைமையின் வீழ்ச்சி காரணமாக கம்பனியின் கணனி அடிப்படையிலான கணக்கீட்டு முறைமையை என்னால் அணுக முடியவில்லை. இதன் விளைவாக, பேரேட்டில் உள்ள விபரங்களை என்னால் சரிபார்க்க முடியவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக ரூபா 94,711,011 தேறிய நட்டத்தை கம்பனி அடைந்திருந்தது. ஆகையால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் மொத்தப் பொறுப்புக்கள் அதன் மொத்தச் சொத்துக்களை ரூபா 572,169,869 ஆல் விஞ்சியிருந்ததுடன் கம்பனியின் நடைமுறைப் பொறுப்புக்கள் அதன் நடைமுறைச் சொத்துக்களை ரூபா 291,144,552 ஆல் விஞ்சியிருந்தது. மேலும் கம்பனியின் குறித்த சில உற்பத்திப் பொருட்களிற்கான மொத்தலாப எல்லை எதிர்மறையாக இருந்ததுடன் கடன் மீள்கொடுப்பனவுகள் செலுத்தப்படாமை மற்றும் கம்பனிக்கு எதிராக பல்வேறு தரப்பினர்களில் சிலரால் ஏற்கனவே சட்ட வழக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இந் நிகழ்வுகள் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடந்தியங்குவதற்கான கம்பனியின் ஆற்றல் தொடர்பாக குறிப்பிடத்தக்களவு ஐயப்பாட்டினை ஏற்படுத்தக்கூடிய பொருண்மையான நிச்சயமற்ற நிலைமை காணப்படுவதனை சுட்டிக்காட்டியது. எனினும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முகாமைத்துவத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டிருத்தல் அல்லது ஏனைய கட்டுப்பாட்டுக் காரணிகள் காணப்படுதல்

தொடர்பாக தேவையான வெளிப்படுத்தல்களுடன் சேர்த்து இவ் விடயத்தை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(இ) கம்பனியானது சில அரசாங்க நிறுவனங்களிடமிருந்து கடன்கள், கடன்பெறுகைகள் மற்றும் முற்பணங்களை பெற்றிருந்தது. இருந்தபோதிலும் அத்தகைய கடன்கள், கடன்பெறுகைகள் மற்றும் முற்பணங்கள் தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீளாய்வு செய்வதற்காக பெறப்பட்ட கடன்கள் அல்லது முற்பணங்களிற்கான உரிய கடன் உடன்படிக்கைகள் அல்லது ஏனைய ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 304,855,185 கூட்டுத்தொகையான கடன் மீதிகள், கடன்பெறுகைகள் மற்றும் முற்பணத்தின் நியாயமான சமர்ப்பித்தல் தொடர்பாக என்னால் திருப்திப்படுவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. மேலும் உரிய கடன் உடன்படிக்கைகள் அல்லது ஏனைய ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் காணப்படாததன் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 13,941,149 தொகையான நிதிக் கிரயத்தின் பூரணத்தன்மையை சரிபார்ப்பதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

(ஈ) கம்பனியானது நிலையான சொத்துக்கள் பதிவேடு அல்லது ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கான விபரமான பட்டியல்களை பேணியிருக்கவில்லை. எனவே 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 29,634,577 தொகையில் நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதி கணிப்பீடு மற்றும் பூரணத்தன்மையை கருத்தில் கொண்டு மாறும்தன்மையை உறுதிப்படுத்தவோ அல்லது சரிபார்க்கவோ என்னால் முடியாதிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் நிலம் மற்றும் கட்டிடம், அலுவலக உபகரணங்கள் மற்றும் மோட்டார் லொரிகள் என்பவற்றின் ஆரம்ப மீதிகள் முறையே ரூபா 1,409,710 தொகை, ரூபா 305,801 மற்றும் ரூபா 1,141,375 தொகைகளால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஊ) 2016 திசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 48,543,442 தொகையான நீண்டகாலமாக பெறவேண்டியதாக நிலுவையில் உள்ள கடனுக்காக ஐயக் கடன் ஏற்பாட்டை கம்பனி செய்திருக்கவில்லை.

(எ) பல்வேறு பதவியணியினர்களின் முன்பணமான ரூபா 3,895,553 மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக அறவிடப்படாமல் காணப்பட்டது.

(ஏ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 38,299,070 தொகையான பிற்போடப்பட்ட வருமானத்தின் இழப்பீட்டிற்கான அரசாங்க மானியத்தின் உடன்படிக்கை, விரிவான பட்டோலை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அதன் உள்ளதன்மையினை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஐ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 177,741,633 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய என்பீரீ, செலுத்த வேண்டிய பீரீரீ, வியாபார நிலுவை மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டிய வீஏரீ என்பவற்றிற்கான விரிவான பட்டோலை, வரித் திரும்பல், வரிக் கணிப்பீடு என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அதன் உள்ளதன்மையினை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஒ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 101,496,653 கூட்டுத்தொகையான வியாபாரக் கடன்பட்டோர், பெறவேண்டிய வீஏரீ மற்றும் இறுதியிருப்புக்கள் என்பவற்றிற்கான விரிவான பட்டோலை, வரித் திரும்பல் மற்றும் ஏனைய போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகள் கணக்காய்விற்குச்

சமர்ப்பிக்கப்படாமையால் அதன் உள்ளதன்மையினை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஓ) நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 16,113,722 தொகையான வரவு மீதியொன்று தொடர்ந்து கட்டுப்பாட்டு ஒதுக்கமாக உரிமை மூலதனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருந்தது. எனினும், என்னால் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகள் அதாவது பட்டோலை, கூட்டக் குறிப்புக்கள் போன்றவை பெறமுடியாதிருந்தமையினால் அந்த மீதியின் உள்ளதன்மையினை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஔ) காசுப்பாய்ச்சல் கூற்றில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 60,948,661 தொகையான நிறுத்திவைத்தல் உழைப்புக்களின் முன்னைய ஆண்டின் சீராக்கங்களுக்கான போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை அதாவது அங்கீகாரம், விரிவான பட்டோலை என்பவற்றை என்னால் பெறமுடியவில்லை.

மேற்குறிப்பிடப்பட்டதன் காரணமாக ஆதனம், பொறி மற்றும் உபகரணம், வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள், பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள், கடன்கள் மற்றும் கடன்பெறுகைகள், வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள், நிதிக் கிரயம், தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் நிதிக் கருவிகளிற்கான தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களை என்னால் சரிபார்க்க முடியாதிருந்தது. இவ் விடயங்கள் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று தொடர்பாக சீராக்கங்கள் எதாவது அவசியமா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாதுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க, இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை நான் வெளிப்படுத்தவில்லை.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

– மேலே குறிப்பிடப்பட்டவாறு கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றிருக்கவில்லை. ஆதலால் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை நான் வெளிப்படுத்தவில்லை.